**<u>காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில்</u>**
**<u>30.11.2023 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தின்</u>**
**<u>தீர்மானம் நகல்கள்</u>**

**பொருள் எண்: 1**

காயல்பட்டினம் நகராட்சியின் நகர்மன்ற துணை தலைவர் திரு. Z.A. சுல்தான் லெப்பை அவர்கள் 18 வது வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கு பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

**குடிநீர்**

காயல்பட்டினம் பப்பரப்பள்ளியில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமான எஸ் எஸ் என்ற சப் ஸ்டேஷன் அமைந்துள்ளது. மின்வாரியத்திற்கு சொந்தமான இந்த சப் ஸ்டேஷனில் மின்வாரிய பணியாளர்கள் குடியிருப்பு உள்ளது. குடிநீர் இணைப்பு இல்லாமல் இருந்து வரும் இந்த சப் ஸ்டேஷசனுக்கு புதிதாக குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு ஏதுவாக நகராட்சி மூலம் குடிநீர் மெயின் குழாய் அமைப்பதற்கு இந்நகர்மன்றத்தின் சார்பாக கோருதல்.

**பொது**

- வடகிழக்கு பருவமழை காரணமாக இந்நகராட்சி பகுதியில் தற்போது பெய்துள்ள கனமழையின் காரணமாக 4-வது வார்டு பகுதியில் மழைநீர் தேக்கம் ஏற்பட்டுள்ளதால், அப்பகுதி மக்கள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகி உள்ளார்கள் மழை நீர் வடிய மிக சிரமம் ஏற்பட்டு கொண்டிருக்கிறது ஆகையால் நிரந்தர தீர்வு காண்பதற்கு இந்நகர்மன்றத்தின் சார்பாக கோருதல்.
- வடகிழக்கு பருவமழை காரணமாக இந்நகராட்சி பகுதியில் தற்போது பெய்துள்ள கனமழையின் காரணமாக 18-வது வார்டு பகுதியில் மழைநீர் தேக்கம் ஏற்பட்டுள்ளதால், அப்பகுதி மக்கள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகி உள்ளார்கள் மழை நீர் வடிய மிக சிரமம் ஏற்பட்டு கொண்டிருக்கிறது ஆகையால் நிரந்தர தீர்வு காண்பதற்கு இந்நகர்மன்றத்தின் சார்பாக கோருதல்.

**<u>தீர்மானம் எண்.564</u>**

- தமிழ்நாடு மின்சார வாரிய பணியாளர் குடியிருப்புக்கு குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக புதிய குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் இந்நகராட்சி நிதி நிலைமைக்கு ஏற்றவாறு செய்ய தீர்மானிக்கப்படுகிறது.
- இந்நகராட்சிக்குட்பட்ட 4வது மற்றும் 18வது வார்டு பகுதியில் மழை நீர் தேக்கம் ஏற்படாத வண்ணம் புதிதாக வடிகால் அமைப்பதற்கு அரசிடமிருந்து மானியம் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 2**

காயல்பட்டினம் நகராட்சியின் 7வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.M.H. ரோஸியா பானு அவர்கள் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும், பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

**சாலை**

- 7-வது வார்டுக்குட்பட்ட சிவன் கோவில் தெருவில் அமைந்திருக்கும் அக்பர்ஷா ஒன்றாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது தெருவுக்கு இடையிலான குறுக்கு மண் சாலையை தார் சாலையாக அமைத்து தர கோருதல்.
- 7-வது வார்டுக்குட்பட்ட சிவன் கோவில் தெரு, குளம் சாகிப் தம்பி தோட்டம் பகுதியில் உள்ள மண் சாலைகளை மாற்றி புதிதாக தார் சாலைகள் அமைக்க வேண்டியுள்ளதால், அப்பகுதி சாலைகளை உடனடியாக சாலை பதிவேட்டில் ஏற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க கோருதல்

**குடிநீர்**

7-வது வார்டுக்குட்பட்ட சிவன் கோவில் தெரு பகுதி மக்களுக்கு போதுமான அளவு குடிநீர் கிடைப்பதில்லை. ஆகையால், அப்பகுதி மக்களுக்கு தேவையான குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக அப்பகுதியில் புதிதாக ஒரு மேல்நிலை நீர் தேக்க தொட்டி அமைத்து தர கோருதல்

**தெருவிளக்கு**

- 7-வது வார்டுக்குட்பட்ட சிவன் கோவில் தெரு, குளம் சாகிப் தம்பி தோட்டம் ஆகிய பகுதிகளில் தெருவிளக்குகள் இல்லாததால் அப்பகுதி மிகவும் இருள் சூழ்ந்து காணப்படுகிறது அதனால் பொதுமக்கள் இரவு நேரங்களில் அப்பகுதியில் செல்ல அச்சமாக இருப்பதால் உடனடியாக அப்பகுதியில் மின் கம்பங்களில் தெருவிளக்குகள் பொருத்துவதற்கும், மேலும், தெருமின் விளக்கு கம்பிகள் இல்லாத மின் கம்பங்களில் புதிதாக தெருமின் விளக்கு இணைப்பு மின் கம்பிகள் பொருத்தி புதிதாக தெருமின் விளக்கு அமைத்து தர கோருதல்

**பொது**

- 7-வது வார்டுக்குட்பட்ட குளம் சாகிபு தம்பி தோட்டம் குடியிருப்பு பகுதிகளில் பெயர் பலகை இல்லாததால் அங்கு வரக்கூடிய தபால்காரர் கொரியர் போன்றவர்களும் வெளியூர் நபர்களும் இடம் தெரியாமல் மிகவும் சிரமப்படுவதால் அப்பகுதியில் புதிதாக பெயர் பலகை அமைத்து தர கோருதல்
- இந்நகர் பகுதியில் பொதுமக்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் தெருக்களில் சுற்றித் திரியும் வெறி நாய்களை உடனடியாக பிடிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க கோருதல்

**<u>தீர்மானம் எண்.565</u>**

- அரசிடமிருந்து அனுமதி / மானியம் பெற்று சாலைகள் அமைக்க தீர்மானிக்கப்பட்டது.
- குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அரசிடமிருந்து அனுமதி / மானியம் பெற்று அமைக்க தீர்மானிக்கப்பட்டது.
- இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் புதிய LED தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு உத்திரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. பணிகளை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.
- பொது கோரிக்கைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது

**பொருள் எண்: 3**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பல இடங்களில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமலும், புதிதாக வீடு கட்டி நீட்டிப்பு செய்துள்ள குடியிருப்பு பகுதிகளிலும், குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமல் இருப்பதால், அப்பகுதிகளுக்கு, குடிநீர் வழங்க இயலாத நிலையில் உள்ளது. ஆகவே, அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு சீரான முறையில் சுத்தமான சுகாதாரமான குடிநீர் வழங்குவதற்கு திருவள்ளுவர் தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய்கள் ரூ.1,60,000/- மதிப்பீட்டில் அமைப்பதற்கும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், இந்நகர்மன்ற தீர்மான எண்.521 நாள்.27.09.2023-ன்படி, அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து இப்பணிக்கு 15.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. T. மாதவன்,<br>20-A, ஓடக்கரை,<br>காயல்பட்டினம் 628 204<br>தூத்துக்குடி மாவட்டம் | மதிப்பீடு ரேட்டை விட 0.05% குறைவு |
| 2. | திரு. R. தலவாணிமுத்து,<br>எண்:38, பூந்தோட்டம்,<br>காயல்பட்டினம் 628 204.<br>தூத்துக்குடி மாவட்டம். | மதிப்பீடு ரேட்டை விட 4.33 % கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு ரேட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. T. மாதவன், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. T. மாதவன், ஒப்பந்ததாரர், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1912/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.566</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 4**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பல இடங்களில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமலும், புதிதாக வீடு கட்டி நீட்டிப்பு செய்துள்ள குடியிருப்பு பகுதிகளிலும், குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமல் இருப்பதால், அப்பகுதிகளுக்கு, குடிநீர் வழங்க இயலாத நிலையில் உள்ளது. ஆகவே, அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு சீரான முறையில் சுத்தமான சுகாதாரமான குடிநீர் வழங்குவதற்கு தைக்காபுரத்தில் குடிநீர் பகிர்மானக்குழாய்கள் ரூ.75,000/- மதிப்பீட்டில் அமைப்பதற்கும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், இந்நகர்மன்ற தீர்மான எண்.521 நாள்.27.09.2023-ன்படி, அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து இப்பணிக்கு 15.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. T. மாதவன்,<br>20-A, ஓடக்கரை,<br>காயல்பட்டினம் 628 204<br>தூத்துக்குடி மாவட்டம் | மதிப்பீடு ரேட்டை விட 0.05% குறைவு |
| 2. | திரு. R. தலவாணிமுத்து,<br>எண்:38, பூந்தோட்டம்,<br>காயல்பட்டினம் 628 204.<br>தூத்துக்குடி மாவட்டம். | மதிப்பீடு ரேட்டை விட 4.34 % கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு ரேட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. T. மாதவன், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. T. மாதவன், ஒப்பந்ததாரர், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1912/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.567</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 5**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பல இடங்களில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமலும், புதிதாக வீடு கட்டி நீட்டிப்பு செய்துள்ள குடியிருப்பு பகுதிகளிலும், குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமல் இருப்பதால், அப்பகுதிகளுக்கு, குடிநீர் வழங்க இயலாத நிலையில் உள்ளது. ஆகவே, அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு சீரான முறையில் சுத்தமான சுகாதாரமான குடிநீர் வழங்குவதற்கு பிலால்பள்ளி தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய்கள் ரூ.1,60,000/- மதிப்பீட்டில் அமைப்பதற்கும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், இந்நகர்மன்ற தீர்மான எண்.521 நாள்.27.09.2023-ன்படி, அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து இப்பணிக்கு 15.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. T. மாதவன்,<br>20-A, ஓடக்கரை,<br>காயல்பட்டினம் 628 204<br>தூத்துக்குடி மாவட்டம் | மதிப்பீடு ரேட்டை விட 0.05% குறைவு |
| 2. | திரு. R. தலவாணிமுத்து,<br>எண்:38, பூந்தோட்டம்,<br>காயல்பட்டினம் 628 204.<br>தூத்துக்குடி மாவட்டம். | மதிப்பீடு ரேட்டை விட 4.32 % கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு ரேட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. T. மாதவன், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. T. மாதவன், ஒப்பந்ததாரர், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1912/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.568</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 6**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பல இடங்களில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமலும், புதிதாக வீடு கட்டி நீட்டிப்பு செய்துள்ள குடியிருப்பு பகுதிகளிலும், குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமல் இருப்பதால், அப்பகுதிகளுக்கு, குடிநீர் வழங்க இயலாத நிலையில் உள்ளது. ஆகவே, அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு சீரான முறையில் சுத்தமான சுகாதாரமான குடிநீர் வழங்குவதற்கு காயிதேமில்லத் நகர் தெற்கு முதல் தெரு நீட்டிப்பு தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய்கள் ரூ.50,000/- மதிப்பீட்டில் அமைப்பதற்கும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், இந்நகர்மன்ற தீர்மான எண்.521 நாள்.27.09.2023-ன்படி, அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து இப்பணிக்கு 15.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. T. மாதவன்,<br>20-A, ஓடக்கரை,<br>காயல்பட்டினம் 628 204<br>தூத்துக்குடி மாவட்டம் | மதிப்பீடு ரேட்டை விட 0.05% குறைவு |
| 2. | திரு. R. தலவாணிமுத்து,<br>எண்:38, பூந்தோட்டம்,<br>காயல்பட்டினம் 628 204.<br>தூத்துக்குடி மாவட்டம். | மதிப்பீடு ரேட்டை விட 4.33 % கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு ரேட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. T. மாதவன், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. T. மாதவன், ஒப்பந்ததாரர், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1912/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.569</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 7**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பல இடங்களில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமலும், புதிதாக வீடு கட்டி நீட்டிப்பு செய்துள்ள குடியிருப்பு பகுதிகளிலும், குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமல் இருப்பதால், அப்பகுதிகளுக்கு, குடிநீர் வழங்க இயலாத நிலையில் உள்ளது. ஆகவே, அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு சீரான முறையில் சுத்தமான சுகாதாரமான குடிநீர் வழங்குவதற்கு பெரிய நெசவுத்தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய்கள் ரூ.75,000/- மதிப்பீட்டில் அமைப்பதற்கும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், இந்நகர்மன்ற தீர்மான எண்.521 நாள்.27.09.2023-ன்படி, அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து இப்பணிக்கு 15.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. T. மாதவன்,<br>20-A, ஓடக்கரை,<br>காயல்பட்டினம் 628 204<br>தூத்துக்குடி மாவட்டம் | மதிப்பீடு ரேட்டை விட 0.05% குறைவு |
| 2. | திரு. R. தலவாணிமுத்து,<br>எண்:38, பூந்தோட்டம்,<br>காயல்பட்டினம் 628 204.<br>தூத்துக்குடி மாவட்டம். | மதிப்பீடு ரேட்டை விட 4.32 % கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு ரேட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. T. மாதவன், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. T. மாதவன், ஒப்பந்ததாரர், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1912/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.570</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 8**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பல இடங்களில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமலும், புதிதாக வீடு கட்டி நீட்டிப்பு செய்துள்ள குடியிருப்பு பகுதிகளிலும், குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமல் இருப்பதால், அப்பகுதிகளுக்கு, குடிநீர் வழங்க இயலாத நிலையில் உள்ளது. ஆகவே, அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு சீரான முறையில் சுத்தமான சுகாதாரமான குடிநீர் வழங்குவதற்கு குளம் சாகிப்தம்பி தோட்டம் பகுதியில் குடிநீர் பகிர்மானக்குழாய்கள் ரூ.1,40,000/- மதிப்பீட்டில் அமைப்பதற்கும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், இந்நகர்மன்ற தீர்மான எண்.521 நாள்.27.09.2023-ன்படி, அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து இப்பணிக்கு 15.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. T. மாதவன்,<br>20-A, ஓடக்கரை,<br>காயல்பட்டினம் 628 204<br>தூத்துக்குடி மாவட்டம் | மதிப்பீடு ரேட்டை விட 0.06% குறைவு |
| 2. | திரு. R. தலவாணிமுத்து,<br>எண்:38, பூந்தோட்டம்,<br>காயல்பட்டினம் 628 204.<br>தூத்துக்குடி மாவட்டம். | மதிப்பீடு ரேட்டை விட 4.32 % கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு ரேட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. T. மாதவன், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. T. மாதவன், ஒப்பந்ததாரர், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1912/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.571</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 9**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பல இடங்களில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமலும், புதிதாக வீடு கட்டி நீட்டிப்பு செய்துள்ள குடியிருப்பு பகுதிகளிலும், குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமல் இருப்பதால், அப்பகுதிகளுக்கு, குடிநீர் வழங்க இயலாத நிலையில் உள்ளது. ஆகவே, அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு சீரான முறையில் சுத்தமான சுகாதாரமான குடிநீர் வழங்குவதற்கு பிரின்ஸ் தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய்கள் ரூ.1,50,000/- மதிப்பீட்டில் அமைப்பதற்கும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், இந்நகர்மன்ற தீர்மான எண்.521 நாள்.27.09.2023-ன்படி, அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து இப்பணிக்கு 15.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது

| | | |
|---|---|---|
| 1. | திரு. T. மாதவன்,<br>20-A, ஓடக்கரை,<br>காயல்பட்டினம் 628 204<br>தூத்துக்குடி மாவட்டம் | மதிப்பீடு ரேட்டை விட 0.04% குறைவு |
| 2. | திரு. R. தலவாணிமுத்து,<br>எண்:38, பூந்தோட்டம்,<br>காயல்பட்டினம் 628 204.<br>தூத்துக்குடி மாவட்டம். | மதிப்பீடு ரேட்டை விட 3.82 % கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு ரேட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. T. மாதவன், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. T. மாதவன், ஒப்பந்ததாரர், காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1912/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.572</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 10**

காயல்பட்டினம் நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் தாமிரபரணி ஆற்றுப்படுகையில் உள்ள இரண்டாம் எண். கிணற்றில் உள்ள 7.50 H.P மோட்டார் பேரிங் சேதமடைந்துள்ளது. பழுது நீக்கம் செய்து புதிய Starter வாங்கி பொருத்தும் பணி செய்வதற்கு ரூ.32,000/-க்கு இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.560 நாள்.09.11.2023-ன்படி, அனுமதி பெறப்பட்டு, இப்பணிக்கு 23.11.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு. T. மாதவன்,<br>20-A, ஓடக்கரை,<br>காயல்பட்டினம் 628 204<br>தூத்துக்குடி மாவட்டம் | ரூ 31,500/- |
| 2. | திரு. R. தலவாணிமுத்து,<br>எண்:38, பூந்தோட்டம்,<br>காயல்பட்டினம் 628 204.<br>தூத்துக்குடி மாவட்டம். | ரூ. 33,500/- |
| 3. | கே.கே. கன்ஸ்ரக்சன்<br>12,வணிக வளாகம்,<br>திருச்செந்தூர் | ரூ. 35,000/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. T. மாதவன், ஒப்பந்ததாரர், காயல்பட்டினம் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

இப்பணிக்குரிய குறைந்த விலைப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.573</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 11**

காயல்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து 100HP மின் மோட்டார் மூலம் குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு இந்நகருக்கு குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இதில் 2-ம் எண் மோட்டார் மற்றும் பம்பில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்வதற்கு, ரூ.1,78,700/-ஐ இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.561 நாள்.09.11.2023-ன்படி, அனுமதி பெறப்பட்டு, இப்பணிக்கு 23.11.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர்கள் | | |
|---|---|---|---|---|
| | | திரு. T. மாதவன், | திரு. R. தலவாணிமுத்து | கே.கே. கன்ஸ்ரக்சன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பித்தளை ஓரிங் பழுது நீக்கம் செய்ய லேத் ஒர்க்ஸ் செய்து சரி செய்வதற்கு | ரூ 16,500/- | ரூ 18,500/- | ரூ 19,500/- |
| 2. | மோட்டார் பெட் வெல்டிங் வைத்து அதனை சரியாக பொருத்தம் செய்யவும், பிளேட் வைத்து வெல்டிங் செய்த வகைக்கு | ரூ 4,200/- | ரூ 6,200/- | ரூ 7,200/- |
| 3. | பழுது சரிபார்த்த பம்பினை மோட்டார் பெட்டில் பொருத்திய வகைக்கு கூலி | ரூ 3,500/- | ரூ 5,500 /- | ரூ 6,500/- |
| 4. | 100HP மோட்டார் இயக்குவதற்கு 12mm டப்ளான் ரோப் 2 Box | ரூ 9,500/- | ரூ 12,500/- | ரூ 13,500/- |
| 5. | பொன்னன்குறிச்சி 1ம் எண் மோட்டார் ரீவைண்டிங் செய்வதற்கு மோட்டார் கழற்சி மாட்டுவதற்கு கூலி | ரூ 8,000/- | ரூ 10,000/- | ரூ 11,000/- |
| 6. | ரீவைண்டிங் மற்றும் போக்குவரத்து வண்டி வாடகை புது பேரில் மாற்றி சரி செய்வதற்கு | ரூ 1,37,000/- | ரூ 1,57,000/- | ரூ 1,68,000/- |
| **மொத்தம்** | | **ரூ. 1,78,700/-** | **ரூ. 2,09,700/-** | **ரூ. 2,25,700/-** |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. T. மாதவன், ஒப்பந்ததாரர், காயல்பட்டினம் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு,**

குறைந்த விலைப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.574</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 12**

காயல்பட்டினம் நகருக்கு பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்யும் மெயின் குடிநீர் குழாய்கள் தாமிரபரணி ஆற்றில் தென்கால் வாய்க்கால் பகுதியில் பாலம் அமைக்கப்பட்டு அதன் மேற்பகுதியில் குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது தாமிரபரணி ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளதால் அதில் அதிகமான அளவில் அமலி செடிகள் வந்து பாலத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தூண்களை சுற்றி அடைப்பு ஏற்படுத்தி உள்ளதால் அப்பாலம் கீழேவிழக்கூடிய நிலையில் உள்ளது. அவற்றை சரி செய்வதற்கும், பாலத்தின் கீழ் உள்ள அமலி செடிகள் மற்றும் குப்பைகளை அகற்றி சுத்தம் செய்வதற்கும், ரூ.24,500/-க்கு இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.562 நாள்.09.11.2023-ன்படி, அனுமதி பெறப்பட்டு, இப்பணிக்கு 23.11.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு. T. மாதவன்,<br>20-A, ஓடக்கரை,<br>காயல்பட்டினம் 628 204<br>தூத்துக்குடி மாவட்டம் | ரூ 24,500/- |
| 2. | திரு. R. தலவாணிமுத்து,<br>எண்:38, பூந்தோட்டம்,<br>காயல்பட்டினம் 628 204.<br>தூத்துக்குடி மாவட்டம். | ரூ. 28,500/- |
| 3. | கே.கே. கன்ஸ்ரக்சன்<br>12,வணிக வளாகம்,<br>திருச்செந்தூர் | ரூ. 30,500/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. T. மாதவன், ஒப்பந்ததாரர், காயல்பட்டினம் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

குறைந்த விலைப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.575**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 13**

காயல்பட்டினம் நகராட்சிக்கு பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்று நிலையம் தாமிரபரணி ஆற்று படுகையில் அமைக்கப்பட்டு 6 எண்ணம் இன்பில்டரேஷன் கிணறுகளில் இருந்து 7.5H.P சப்மெர்சிபில் மின்மோட்டார் மூலம் பம்பிங் செய்யப்படுகிறது. தற்பொழுது 6 எண்ணம் கிணறுகளின் அருகில் தமிரபரணி ஆற்றில் தண்ணீர் திறக்காமல், இருந்தால் கிணற்றை சுற்றி நீர் வறத்து வற்றி வறட்சியாக இருந்த நிலையில் தற்பொழுது தாமிரபரணி ஆற்றுக்கு பாபநாசம் டேம்-லிருந்து தண்ணீர் திறந்து விடபட்டுள்ளதால் ஆற்று கரையோரம் அடைப்பட்டு இருக்கும் மணலை ஜேசிபி இயந்திரம் மூலம் சுத்தம் செய்யவும், அமலி செடிகளை அகற்றும் பணி செய்வதற்கு ரூ.23,500/-ஐ இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.563 நாள்.09.11.2023-ன்படி, அனுமதி பெறப்பட்டு, இப்பணிக்கு 23.11.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு. T. மாதவன்,<br>20-A, ஓடக்கரை,<br>காயல்பட்டினம் 628 204 | ரூ 23,500/- |
| 2. | திரு. R. தலவாணிமுத்து,<br>எண்:38, பூந்தோட்டம்,<br>காயல்பட்டினம் 628 204. | ரூ. 26,500/- |
| 3. | கே.கே. கன்ஸ்ரக்சன்<br>12,வணிக வளாகம்,<br>திருச்செந்தூர் | ரூ. 28,500/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. T. மாதவன், ஒப்பந்ததாரர், காயல்பட்டினம் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

குறைந்த விலைப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.576</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 14**

காயல்பட்டினம் நகராட்சி அலுவலகத்தில் முதல் தள மேற்கூரையில் அமைக்கப்பட்டுள்ள திறந்த வெளி கூரையில் பொருத்தப்பட்டுள்ள கண்ணாடி இழை கூரைத்தகடுகள் அடிக்கடி சேதமடைந்து விடுவதால் மழைக்காலங்களில் அலுவலக உள்பகுதியில் மழைநீர் தேங்கி அலுவலக பணிகள் பாதிக்கப்படுகிறது. மேலும், வெயில்காலங்களில் அதிகமான வெப்பம் அலுவலகப்பகுதியில் படுவதால் அலுவலக உள்பகுதியில் உள்ள திறந்த வெளிப்பகுதியினை பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. மேலும், நகராட்சியின் பணியாளர்கள் பயன்படுத்தும் கழிப்பறையின் மேற்கூரை சேதமடைந்துள்ளதால் மழைக்காலங்களில் கழிப்பிடத்தினை பயன்படுத்த முடியாமலும் மேற்கூரை சேதமடைந்துள்ளதால் பணியாளர்கள் அதனை பயன்படுத்துவதில் பாதுகாப்பு இல்லாத நிலை இருப்பதாலும், அதனை உடனடியாக சீரமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தற்பொழுது வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளதால் 19.11.2023 அன்று பெய்த கனமழையில் அலுவலக திறந்த வெளிப்பகுதியின் வழியாக மழைநீர் அலுவலகத்தின் உள்பகுதியில் தேங்கி அலுவலக கோப்புகள் பாதிக்கப்பட்டுள்ளதாலும், கழிப்பிடத்தினை நகராட்சி பணியாளர்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாலும் மேற்கண்ட திறந்த வெளிப்பகுதியில் சேதமடைந்த கண்ணாடி இழை கூரைத்தகடுகள் மற்றும் கழிப்பிடத்தின் கண்ணாடி இழை மேற்கூரை தகடுகளையும் அப்புறப்படுத்திவிட்டு பாதுகாப்பான முறையில் கூரை அமைத்திட தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்திட நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதின்படி, மேற்கண்ட பணியின் அவசியம் கருதியும் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டத்தில் கன மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், அலுவலக நலன் கருதியும் நகராட்சி பணியாளர்களின் பாதுகாப்பு கருதியும் மேற்கண்ட பணியினை செய்திட ரூ.1.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் பணியினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

- பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
- ரூ.1.90 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.577</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 15**

காயல்பட்டினம் நகராட்சியில் கீழ்க்கண்டவாறு தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 40 வாட்ஸ் குழல் விளக்குகள் (Tube Light) | - | 1152 எண்ணம் |
| 150 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | - | 119 எண்ணம் |
| 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | - | 150 எண்ணம் |
| 2X36 வாட்ஸ் சி எப் எல் விளக்குகள் | - | 108 எண்ணம் |
| உயர் கோபுர மின் விளக்குகள் | - | 6 எண்ணம் |
| LED | - | 94 எண்ணம் |
| **மொத்தம்** | - | **1629** எண்ணம் |

மேற்கண்டவாறு உள்ள நகராட்சி தெரு விளக்குகளை தனியார் மூலம் பராமரிக்கும் பணி செய்ய தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம். ந.க.எண்.45490/2013-9/DO3 நாள்.24.01.2014-ன்படி, அனுமதி பெறப்பட்டதன்படி, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, M/s.ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு தற்பொழுது வரை இந்நகராட்சி தெருவிளக்குகள் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. அதனை தொடர்ந்து இந்நகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தையும் எல்.இ.டி விளக்குகளாக (Energy Saving Light) மாற்ற அரசின் முடிவின்படி, பூர்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளபட்டு வந்த நிலையில் நகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தையும் LED விளக்குகளாக மாற்றும் பணிக்கான நடவடிக்கைகள் முடிவடையும் வரை தெருவிளக்கு பணியின் அவசியம் கருதியும் பொதுமக்களின் நலன் கருதியும் ஏற்கனவே தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் M/s. ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனத்தின் மூலம் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளவும், ஏற்கனவே 2021-2022ம் ஆண்டிற்கு நகர்மன்ற தீர்மான எண்.2131 நாள்.30.06.2021-ன்படி இந்நகர்மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்திர மதிப்பீட்டு தொகையான ரூ.29.32 இலட்சத்திற்கு 10.07.2021 முதல் 09.07.2022 வரையிலும் பணி உத்தரவு வழங்கப்பட்டு, அதனை தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண். 102 நாள். 30.06.2022 –ன்படி, 10.07.2022 முதல் 09.07.2023 வரை உள்ள காலத்திற்கு நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டு மேற்காணும் நிறுவனத்தால் பணிகள் செய்யப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 30520/2022/WB நாள்.04.11.2022-ந் தேதிய நிர்வாக அனுமதியின்படி, 28.12.2022 ஆம் நாளன்று இரண்டு உறை (2 cover) முறையில் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் (e-tender) கோரப்பட்டு, M/s. சூப்பர் எலக்ட்ரிக்கல்ஸ், மதுரை நிறுவனத்திற்கு 20.02.2023 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்படாத நிலையில் தெருவிளக்கு பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு பொது மக்கள் நலன் கருதி இந்நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 10.07.2023 முதல் 09.10.2023 வரை மூன்று மாதங்களுக்கு பணிகள் செய்வதற்கு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து தீர்மான எண்.458 நாள்.27.07.2023-ன்படி, நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் M/s. சூப்பர் எலக்ட்ரிக்கல்ஸ், மதுரை நிறுவனத்தால் இந்நகராட்சிக்கு தெருமின் விளக்கு பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு, தெருவிளக்கு பொருட்களின் தரம் ஆய்வு செய்து M/s Trust Partner,Madurai என்ற நிறுவனம் மூலம் சான்று பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் தெருவிளக்கு பணியின் அவசியம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதியும் இந்நகர்மன்ற தீர்மான எண். 2131 நாள்.30.06.2021-ல், அங்கீகரிக்கப்பட்ட வருடாந்திர மதிப்பீட்டு ரூ.29.32 இலட்சத்திற்கு (GST உட்பட) ஏற்கனவே இந்நகராட்சி தெருவிளக்குகளை பராமரிப்பு பணிகள் செய்து வரும் M/s. ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனத்திற்கு (10.10.2023 முதல் 09.01.2024 வரை) மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து பணிகள் செய்திடும் பொருட்டு, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.566/2012/இ1)**

**<u>தீர்மானம் எண்.578</u>**

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்: 16**

காயல்பட்டினம் நகராட்சியில் ஒப்பந்ததாரராகப் பதிவு செய்ய வேண்டி கதவு எண்.4/76, கிழக்கு தெரு, தேரியூர், செட்டியாபத்து, தூத்துக்குடி மாவட்டம் என்ற முகவரியில் உள்ள திரு.A. சக்திவேல் என்பவரால் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் ஐந்தாம் நிலை வகுப்பு (Class V) ஒப்பந்ததாரராக பதிவு செய்வதற்கு, பொறியாளரின் பரிந்துரை பெற்று, அதற்குரிய கட்டணங்கள் வசூல் செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

காயல்பட்டினம் நகராட்சியில் திரு.A. சக்திவேல் என்பவரை ஒப்பந்ததாரராக பதிவு செய்வதற்கு கொடுத்துள்ள விண்ணப்பத்தின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.2116/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.579</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 17**

காயல்பட்டினம் நகராட்சி எல்லையை அறிந்து கொள்ளும் வகையில் நகராட்சி எல்லையில் வரவேற்பு & நன்றி தெரிவிக்கும் பெயர் பலகைகள் (1) ஓடக்ககரை (2) பைபாஸ் சாலை ( போலீஸ் செக் போஸ்ட் எதிர் புறம்) (3) சூர்யா மர இழைப்பகம் (DCW பாலம் அருகில்) (4) எல்.எப். சாலை ஆகிய நான்கு இடங்களில் துருப்பிடிக்காத STAINLESS STEEL - DOUBLE SIDE FACE NAME BOARD அமைப்பதற்கும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், இந்நகர்மன்ற தீர்மான

எண்.329 நாள்.27.04.2023-ன்படி, அனுமதி பெறப்பட்டது. அதன்படி, இப்பணிக்கு 15.11.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | வேலையின் விபரம் | நிறுவனத்தின் பெயர்கள் | |
|---|---|---|---|
| | | **Arte Enterprises, Ambattur Industrial Estate. Channai-58** | **Pack Tech Systems and Equipments, Sidco Women Industrial Park, Chennai-62** |
| 1. | Supply & fixing of retro reflective dual side ULB SIGN BOARDS size 1800mm x1500mm x 2mm thick stainless steel sheet . outer support frame of stainless steel 38mm dia pipe . vertical posts of 14 Feet Hieght 90mm dia pipe fixed to the grount by means of properly designed foundation with M 20 GREDE cement concrete 60cm x 60cm x60cm complete.the background shall be blue color letters and border in white, The item includes earthworkexcavation,cost of all materials,loading, unloading, lead, lifting, transportation etc; complete 7years pre-qualification warranty as per clause 6.9 of irc 67-2012 type x1 retro report for the retro reflective sheeting offered shall be submitted by the contractor for technical qualification in the tender | | |
| | SIDE PLACE.<br>1. ODAKKARAI.<br>2. 2. DCW BRIDGE.<br>3. 3.BY PASS.<br>BOARD SIZE 1800MM X 1500MM | Rs. 1,25,000 x 3Nos.<br>Rs. 3,75,000/-<br>(Exculding GST) | Rs. 1,27,000 x 3Nos.<br>Rs. 3,81,000/-<br>(Exculding GST) |
| | 4. LAKSHMIPURAM<br>BOARD SIZE – 1500MM X 1500MM | Rs. 1,15,000/-<br>(Exculding GST) | Rs. 1,19,000/-<br>(Exculding GST) |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. Arte Enterprises, சென்னை-58 நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. Arte Enterprises, சென்னை-58 நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணிகள் மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.580</u>**

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்:18**

காயல்பட்டினம் நகராட்சியில் 18 வார்டுகள் உள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை 47,840 ஆகும். இந்நகராட்சிக்கு 19 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து நகராட்சி பகுதிகளுக்கு சீரான குடிநீர்

விநியோகம் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை 4.43 MLD வீதம் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. தற்போது காயல்பட்டணம் நகராட்சியில் பொறியியல் - குடிநீர் பிரிவில் ஒரு குடிநீர் குழாய் பொருத்துநர் மட்டுமே உள்ளார். தற்போது புதிய பைப்லைனில் தினசரி குடிநீர் சப்ளை செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நகர் பகுதியில் சுமார் 176 குடிநீர் வால்வுகளை திறந்து குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. நகரில் குடிநீர் சீராக விநியோகம் செய்ய போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் இப்பணிகளை ஆறு மாத காலத்திற்கு (01.12.2023 முதல் 31.05.2024 வரை) ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளும் பொருட்டு ரூ. 8,00,000/- (ரூபாய் எட்டு இலட்சம்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிவால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளும் பொருட்டு அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மதிப்பீடு ரூ. 8,00,000/-ஐ மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.581</u>**

- மதிப்பீடு அங்கீகரிக்கப்படுகிறது.
- குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 19**

காயல்பட்டினம் நகராட்சியில் குடிநீர் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் குடிநீர் விநியோகம் செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. தலைமை நீரேற்று நிலையம் காயல்பட்டணம் நகராட்சியிலிருந்து 27 கி.மீ. தொலைவில் உள்ளது. நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார் மற்றும் பம்புகளை இயக்குவதில் சிரமம் ஏற்பட்டுவருகிறது. எனவே தலைமை நீரேற்று நிலையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி குடிநீர் விநியோகத்தினை சீராக செய்வதற்கு ஆறு மாத காலத்திற்கு (01.12.2023 முதல் 31.05.2024 வரை) ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளும் பொருட்டு ரூ. 8,00,000/- (ரூபாய் எட்டு இலட்சம்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிவால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளும் பொருட்டு அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மதிப்பீடு ரூ. 8,00,000/-ஐ மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.582</u>**

- மதிப்பீடு அங்கீகரிக்கப்படுகிறது
- குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்:20**

காயல்பட்டணம் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்குகள் முறையே WP(MD)NO. 14250/2023, WP(MD) NO.26006/2023 . WP(MD) NO. CONT.PET (MD) NO.1885/2023 மற்றும் WP(MD) NO.12993/2021 ஆகியவற்றிற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, நகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகி அனைத்து வழக்குகளிலும் நகராட்சிக்கு வெற்றி பெற்று தந்த வகைக்கு, அரசு வழக்கறிஞர் திரு.நிர்மல்குமார் என்பவருக்கு கட்டணமாக தொகை ரூ.50,000/- மட்டும் வருவாய் நிதியில் இருந்து வழங்கியதை மன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

நகராட்சியின் நிர்வாக அவசியத்தினை கருதி அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.583</u>**

- அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:21**

தமிழக அரசின் அறிவுறுத்தலின்படி, காயல்பட்டணம் நகராட்சியில் மக்களுடன் முதல்வர் என்ற சிறப்பு முகாம் திட்டத்தினை செயல்படுத்திட தெரிவித்தன்படி, ஜலாலியா நிக்காஹ் மஜ்லிஸ் என்ற தனியார் கட்டிடத்தில் வைத்து கடந்த 22.11.2023 அன்று நடைபெற்றது. மேற்படி, முகாமிற்கு தேவையான கணினி மேஜைகள் டான்சி நிறுவனத்திற்கு தொகை காசோலை மூலம் செலுத்தி மேஜைகள் பெறப்பட்டது. மேலும்,கணினிகள்,பிரிண்டர்கள் ஆகியவற்றினை அரசு அனுமதி பெற்ற ஜெம் விலையில் வாங்கப்பட்டது. மேலும், உணவுகள், டிஜிட்டல் பேனர், நோட்டீஸ்கள், இன்டர்நெட் இணைப்பு மற்றும் இதர செலவினங்களை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மக்களுடன் முதல்வர் என்ற இந்த சிறப்பு திட்ட முகாம்கள் இனி வரும் நாட்களில் தொடர்ந்து நடத்தப்பட உள்ளதால், அதற்குரிய செலவினங்களையும், இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கும் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. தமிழக அரசின் இத்திட்டம் முதல்வரின் சிறப்பு திட்டம் என்பதால், மேஜைகள் மற்றும் கணினிகள், இதர பயன்பாட்டு செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்
2. நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. இனிவரும் நாட்களில் நடைபெற உள்ள முகாம்களுக்கான செலவினங்களை வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.2492/2023/சி1)**

**<u>தீர்மானம் எண்.584</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:22**

காயல்பட்டினம் நகராட்சி பேருந்து நிலையத்தில் (NEW BUS STAND SHOPS) உள் கடை எண்.7-க்கு குத்தகை உரிமம் திரு. காமராஜ் என்பவரின் பெயரில் இருந்து வருகிறது. மேற்காணும் கடைக்கு 31.03.2023 வரை கடை வாடகை நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.03.07.2007-ன்படி திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1908/2023/அ2 நாள்.20.07.2023 மற்றும் இந்நகர்மன்ற தீர்மான எண்.472 நாள்.27.07.2023-ன்படி, காயல்பட்டினம் நகராட்சி பேருந்து நிலையத்தின் கடைகளுக்கு 01.04.2023 வாடகை மறு நிர்ணயம் செய்து இவ்வலுவலக கேட்பு அறிவிப்பின்படி, வசூல் செய்யபட்டு வருகிறது. அதில் கடை எண்.7-க்கு 01.04.2023 முதல் கீழ்கண்டவாறு கடை வாடகை நிலுவையாக இருந்து வருகிறது.

| ஆண்டு / மாதம் | தொகை ரூ. | GST ( ரூ.) | Penalty ( ரூ.) | கூடுதல் ரூ. |
|---|---|---|---|---|
| 2022-2023 Apr to Mar | 12X468 | 12X84 | 12X7 | 6708.00 |
| 2023-2024-Apr | 3590.00 | 646.00 | 54.00 | 4290.00 |
| 2023-2024-May | 3590.00 | 646.00 | 54.00 | 4290.00 |
| 2023-2024-Jun | 3590.00 | 646.00 | 54.00 | 4290.00 |
| 2023-2024-Jul | 3590.00 | 646.00 | 54.00 | 4290.00 |
| 2023-2024-Aug | 3590.00 | 646.00 | 54.00 | 4290.00 |
| 2023-2024-Sep | 3590.00 | 646.00 | 54.00 | 4290.00 |
| 2023-2024-Oct | 3590.00 | 646.00 | 54.00 | 4290.00 |
| 2023-2024-Nov | 3590.00 | 646.00 | 0.00 | 4236.00 |
| 2023-2024-Dec | 3590.00 | 646.00 | 0.00 | 4236.00 |
| 2023-2024-Jan | 3590.00 | 646.00 | 0.00 | 4236.00 |
| 2023-2024-Feb | 3590.00 | 646.00 | 0.00 | 4236.00 |
| 2023-2024-Mar | 3590.00 | 646.00 | 0.00 | 4236.00 |
| **கூடுதல் தொகை ரூ.** | 48696.00 | 8760.00 | 516.00 | **57972.00** |

மேற்காணும் கடை எண்.7-க்குரிய குத்தகை உரிமைதாரர் திரு. காமராஜ் என்பவர் காலம் சென்றதாலும், அன்னாரின் வாரிசுதாரர்கள் கடையினை தற்போது தொடர்ந்து நடத்துவதற்கு முன் வராத காரணத்தாலும், கடையினை நகராட்சியில் ஒப்படைக்காமலும், வாடகை செலுத்தப்படாமல் நிலுவையாக இருந்து வருகிறது. மேற்படி, நிலுவை கடை வாடகை ஜி.எஸ்.டி உட்பட ரூ. 57972/-ஆகும். நிர்வாக நலனை கருததில் கொண்டு மேற்படி, நிலுவை கடை வாடகை ஜி.எஸ்.டி உட்பட ரூ. 57972/-ஐ இவ்வலுவக பல்வகை கேட்பில் இருந்தும், UTIS மென்பொருளில் இருந்தும் நீக்கம் செய்வதற்கும், அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.03.07.2007-யின்படி கடை எண்.7-க்கு பொது ஏல நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. நிர்வாக நலனை கருத்தில் கொண்டு கடை வாடகை நிலுவை ரூ.57,972/-ஐ இவ்வலுவலக பல்வகை கேட்பிலிருந்து UTIS மென்பொருளில் நீக்கம் செய்வதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. அரசாணையின்படி, பேருந்து நிலையத்தின் உள் கடை எண்.7-க்கு பொது ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.585</u>**

- அங்கீகரிக்கப்படுகிறது.
- பொது ஏல நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:23**

காயல்பட்டினம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகில் இயங்கிவரும் அம்மா உணவகத்தில் சமையல் செய்வதற்கு பயன்படுத்தி வந்த கிரைண்டர், ஃபிரிஜ், இட்லி கொப்பரை, இட்லித்தட்டு, வட்டா, தட்டு, குத்துப்போனி, போன்ற அனைத்துப் பொருள்களும் பழுதான நிலையில் உள்ளதால், அம்மா உணவகத்தில் உணவு தயாரிக்கும் பணி செய்வதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டு வருகிறது. ஆகையால், கீழ்காணும் விபரப்படி, புதிய பொருட்கள் வாங்கி தருமாறும், காயல்பட்டினம் நகராட்சி அம்மா உணவக அன்னம் மகளிர் சுயஉதவி குழுவால் கோரப்பட்டுள்ளது.

| வ.எண். | பொருட்கள் | எண்ணம் |
|---|---|---|
| 1. | கிரைண்டர் -20 கிலோ | 2 |
| 2. | தண்ணீர் ஜக் -1 லிட்டர் | 5 |
| 3. | குத்து போணி - 20 கிலோ | 5 |
| 4. | ஸ்டூல் | 5 |
| 5. | தட்டு | 100 |
| 6. | ஃபிரிஜ் | 1 |
| 7. | கரண்டி (சிறியது) | 10 |
| 8. | கரண்டி (பெரியது) | 2 |
| 9. | இட்லி கொப்பரை (பெரியது) | 2 |
| 10. | வட்டா -25 கிலோ | 2 |
| 11. | இட்லி தட்டு | 12 |
| 12. | குக்கர் - 10 லிட்டர் | 2 |
| 13. | கத்தி (பெரியது) | 5 |
| 14. | லைட்டர் | 3 |

அம்மா உணவகத்தில் தினசரி காலை மற்றும் மதிய உணவுகள் தயார் செய்து பொது மக்களுக்கு எவ்வித தடையின்றி வழங்கிடும் பொருட்டு மேற்காணும் விபரப்படியான, பொருள்கள் புதிதாக வாங்குவதற்கும் நிர்வாக நலனை கருத்தில் கொண்டு, அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. உரிய நடவடிக்கைமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண்.2087/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.586</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 24**

காயல்பட்டினம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022, பிரிவு 57(7)-ன் கீழ், மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்குரிய செலவினங்கள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.587</u>**

- பிரிவு 57(7) பதிவேடு பார்வையிட்டு செலவினங்கள் அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:25**

காயல்பட்டினம் நகராட்சியின் **ஏப்ரல்-2023 முதல் அக்டோபர் - 2023** ஆம் மாதம் வரையிலான கேட்பு வசூல் நிலுவை பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனங்கள் | நிலுவை & நடப்பு கேட்பு ரூ. (இலட்சத்தில்) | நிலுவை &நடப்பு வசூல் ரூ. (இலட்சத்தில்) | நிலுவை &நடப்பு நிலுவை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி | 191.51 | 123.52 | 67.99 |
| 2 | காலிமனை வரி | 25.37 | 15.23 | 10.14 |
| 3 | குடிநீர் கட்டணம் | 89.05 | 44.29 | 44.76 |
| 4 | வரியற்ற இனம் | 11.57 | 6.13 | 5.44 |
| 5 | தொழில்வரி | 19.50 | 17.43 | 2.07 |
| 6 | SUC Charges | 21.33 | 10.39 | 10.94 |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**<u>தீர்மானம் எண்.588</u>**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்:26**

காயல்பட்டினம் நகராட்சியின் **ஏப்ரல்-2023 முதல் அக்டோபர் - 2023** மாதம் வரையிலான வரவு மற்றும் செலவு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வரவினங்கள் (இலட்சத்தில்)** | | | |
|---|---|---|---|
| 110 | வரியினங்கள் | I-1 | 156.18 |
| 140 | பயனர் கட்டணங்கள் | I-4 | 93.75 |
| 150 | விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | I-5 | 5.12 |
| 160 | மானியங்கள் | 1-6 | 376.58 |

| | | | |
|---|---|---|---|
| 170 | முதலீடுகள் மூலம் வருமானம் | I-7 | 0.08 |
| 180 | இதர வருமானம் | I-9 | 11.43 |
| **மொத்தம்** | | | **643.14** |
| **செலவினங்கள் (இலட்சத்தில்)** | | | |
| 210 | ஊதிய செலவினங்கள் | I-10 | 222.60 |
| 220 | நிர்வாக செலவினங்கள் | I-11 | 49.05 |
| 230 | இயக்க-பழுதுகள்(ம)பராமரிப்பு செலவுகள் | I-12 | 392.55 |
| **260** | நகராட்சி பங்குத்தொகை | **1-15** | **12.76** |
| **மொத்தம்** | | | **676.96** |
| **மொத்தம் கூடுதல் / குறைவு** | | | **33.82** |

**அலுவலக குறிப்பு:**

- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**தீர்மானம் எண்.589**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்: 27**

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். அ2/5863/2022, நாள்.05.09.2023-ன்படி, பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2023-24-ன் கீழ் காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட அருணாச்சலபுரம், பகுதியில் அமைந்துள்ள நேஷனல் துவக்கப்பள்ளியில் புதிய பள்ளி கட்டிடம் ரூ.34.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 09.11.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s. ஸ்ரீஅன்கோ,<br>சந்தை எடியூர்,<br>உடன்குடி | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட<br>0.06 % குறைவு |
| 2. | M/s. தேஜா ஸ்டேக்,<br>எண்:1/243-11 ஸ்ரீகிருஷ்ணாநகர்,<br>மேல திருச்செந்தூர்.<br>திருச்செந்தூர் | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட<br>0.58 % கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. ஸ்ரீஅன்கோ, உடன்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. M/s. ஸ்ரீஅன்கோ, உடன்குடி என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1267/2023/ இ1)**

**<u>தீர்மானம் எண்.590</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 28**

தூத்துக்குடி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை - 2023 ன் காரணமாக சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு துறை சென்னை-6 மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளபடி, முன் எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வது குறித்து தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால், நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டங்களின் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. அதன்படி, முன்னேற்பாடுகள் செய்யும் வகையில் நடவடிக்கை மேற்கொள்வதற்கும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், இந்நகர்மன்ற தீர்மான எண்.555 நாள்.09.11.2023-ன்படி, அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி, முன்னேற்பாடுகள் செய்யும் வகையில் தேவையான தளவாடப் பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் விநியோகம் செய்வதற்கு 15.11.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் சரக்கு மற்றும் சேவை வரி (G.S.T) சேர்த்து கீழ்க்காணும் விவரப்படியான மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | வேலையின் விபரம் | நிறுவனத்தின் பெயர்கள் | | |
|---|---|---|---|---|
| | | திருமலை டிரேடர்ஸ், திருநெல்வேலி | திருமுருகன் கெமிக்கல்ஸ், திருநெல்வேலி | ஸ்ரீநம்பி கெமிக்கல்ஸ், திருநெல்வேலி |
| 1. | தண்ணீர் எடுக்கும் ஹோண்டா பம்ப் (1எண்ணம்) | ரூ.39,000/- | ரூ.38,000/- | ரூ.36,000/- |
| 2. | தண்ணீர் எடுக்கும் ஹோஸ் (1அடி) | ரூ.110/- | ரூ.120 /- | ரூ.96/- |
| 3. | மரம் அறுக்கும் இயந்திரம் (1 எண்ணம்) | ரூ.38,900/- | ரூ.39,000/- | ரூ.28,000/- |
| 4. | செயின் பிராக்ட் (1எண்ணம்) | ரூ.11,900/- | ரூ.12,000/- | ரூ.4,800/- |
| 5. | மழைக்கோட் (1 எண்ணம்) | ரூ.2,690/- | ரூ.2990/- | ரூ.2,690/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. ஸ்ரீநம்பி கெமிக்கல்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு,**

- M/s. ஸ்ரீநம்பி கெமிக்கல்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
- வடகிழக்கு பருவமழை - 2023 ன் காரணமாக முன்னேற்பாடுகள் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.
- நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண். 1797/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.591</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**ஓம்/கே.ஏ.எஸ். முத்து முஹம்மது**
**நகர்மன்ற தலைவர்,**
**காயல்பட்டினம் நகராட்சி**